[1979 மார்ச் 17

திருவில்லிப்புத்தூரை சுற்றுலா மையமாக்கல்.

*வினா எண் : 443—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூரை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசின் முத்திரைச் சின்னமே ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலை மாடலாகக் கொண்டு விளங்குகிறது. அங்கே ஆண்டாள் கோயில் இருக்கிறது. திருவாரூர் தேரைப்போன்ற பெரிய தேர் இருக்கிறது. தரகுமலை மாதா கோவில் இருக்கிறது. சதுரகிரி மாகலிங்கம் கோயில் இருக்கிறது. குற்றால நீர் வீழ்ச்சியைப் போல ஒரு நீர் வீழ்ச்சி சரக்கம்பாறையில் இருக்கிறது. அழகர் கோயிலில் இருந்து வரும் தீர்த்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் இருக்கிறது, இதைப் பார்ப்பதற்கு பக்தர்கள் அதிக அளவில் வருகிறார்கள். மேலும் அங்கே யானைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் ஒரு சரணாலயம் அமைக்கவும் ஆய்வு வேலைகள் நடந்து வருகின்றன. இவ்வாறு அது ஒரு சுற்றுலாப் பயணத்திற்கு உகந்த வகையில் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியைச் சுற்றுலா இடமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் எடுத்துச் சொன்ன அத்தனை கருத்துக்களுக்கும், விவரங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இவ்வளவு நல்ல காட்சிக்குரிய இடங்கள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் எந்தக் காரணத்தாலோ அந்தப் பகுதி இதுவரையில் கவனிக்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது. ஆனால் அறநிலையத் துறை, வனத் துறை, சுற்றுலாத் துறை பொதுப் பணித்துறை ஆகிய இத்தனை துறைகளும் சேர்ந்து அந்தப் பகுதிகளில் எந்த அளவிற்கு எந்தெந்த வகைகளில் அதை வசதிகள் உடையதாக ஆக்கி நம்முடைய அந்தப் பகுதி மாவட்ட மக்களாவது வந்து பார்க்கின்ற அளவிற்கு அதை ஒரு எக்ஸ்கர்ஷன் செண்டர் என்ற அளவிற்கு உருவாக்குவதற்குப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.